# வாழ்விக்கும் வைணவம்

**ஸ்ரீவைஷ்ணவச் சூடாமணி D.A.ஜோசப், பாண்டிச்சேரி**
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

தசரதன் இறந்த போது சிம்மாசனம் காலியாகிறது. மாமன் வீட்டுக்குப் போயிருந்த பரதன் இன்னும் திரும்பவில்லை. அப்பொழுது விரைவில் ஆட்சிபீடத்தில் ஒரு அரசனை அமர்த்த வேண்டும் என்று மந்திரிகள் கூடி ஆலோசனை செய்கிறார்கள். அரசன் இல்லாத நாட்டில் என்னென்ன தீய விளைவுகள் நிகழும் என்று விவாதிக்கிறார்கள். அதில் நாம் இன்று பிரபலமாகப் பேசும் "லஞ்சம்" இடம் பெறுகிறது. நியாயமில்லாத ஊதியம் என்று பொருள்படும் இந்த லஞ்சம் என்ற சொல் "लञ्चा" என்ற வடசொல்லாகும். காட்டிலிருந்து தன்னைக் கூட்டிக் கொண்டு போகவந்த பரதனிடம் அரச நீதியை பற்றி பேசுகிற ஸ்ரீராமன் அரசு அதிகாரிகளுடைய நேர்மையை பற்றி மிக கவனிப்பாக இருக்க வேண்டும் என்று கூறும் போதும் இந்த லஞ்சத்தைப் பற்றி எச்சரிக்கிறான். பொருளாதார நியாயங்களைப் பேசும் பண்டைக்கால பல்வேறு சாத்திரங்களும் லஞ்சத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கின்றன.

லஞ்சம் தொன்மை வாய்ந்தது. மனித இனம் போல மிகப் பழையது. துர்க்குணம் தலைதூக்கும் இடமெல்லாம் இந்த துஷ்டப் பழக்கமும் தலைவிரித்தாடியிருக்கிறது. ஆனால் நம் முன்னோர்கள் இதைத் தவிர்ப்பதிலும் ஒடுக்குவதிலும் முனைப்பாக இருந்திருந்திருக் கிறார்கள். இதனால் ஏற்படும் சமூகக் கேடுகளைப் பற்றி மட்டுமின்றி ஆன்மிகத் தீமைகளையும் பற்றிச் சிந்தித்திருக்கிறார்கள். ஆன்மிகத்துக்கும், பணத்துக்கும் என்ன தொடர்பு என்று வியக்கிறீர்களா? அது நிறையவே உண்டு. பொருளாசைக்கும் ஆன்மிக இருள் மூட்டத்துக்கும் உள்ள பந்தத்தை ஞானிகள் அனைவரும் நிறையவே எடுத்து சொல்லியிருக்கிறார்கள்.

பணம்—அது ஐந்து ரூபாயாய் இருந்தாலும் சரி அல்லது ஐந்து கோடியாய் இருந்தாலும் சரி—ஒருவருடைய கர்மாவைப் பொறுத்து வந்து சேருவது. அறுசுவை உண்டி அன்றாடம் உண்டு மகிழும் மனிதனுக்கு அதன் அடிப்படைக் காரணமாக விளங்கும் செல்வத்தின் தொடர்பு அவனுடைய புண்ணியத்தினால் நிகழ்வது. அரை வயிற்றுக் கஞ்சிக்கும் ஆலாய்ப் பறக்கும் ஏழையின் ஏழ்மை ஏக்கம் அவனுடைய பாவத்தால் நேர்ந்தது. கோடீஸ்வரர்களுக்குச் சில கோடிகள் கூடுதுவம் சில கோடிகள் குறைவதும் அவரவருடைய கர்ம தாரதம்யத்தைப் பொறுத்தது. ஒவ்வொரு ரூபாயும் ஒருவனுடைய வினைப்பயனின் விளக்கவுரையாம்.

இதில் நியாயமாய் சேமித்த பணம், அநியாயமாய் சம்பாதித்த பணம், என்ற இரண்டு பகுப்பினை கீதாசார்யனான கண்ணன் கீதையில் முறையே "தைவ ஸம்பத்" என்றும் "அசுர ஸம்பத்" என்றும் பாகுபடுத்துகிறான். பாபத்தால் ஈட்டிய பணமும் நியாயத்தால் சேர்த்த பணமும் நம் பார்வைக்கு ஒரே மாதிரி கரன்ஸி

நோட்டுக்களாகத் தான் காட்சியளிக்கும். ஆனால் அந்த கரன்ஸி நோட்டுகளின் பின்னே கண்ணுக்குத் தெரியாத கதைகள் ஏராளம் அடங்கியிருக்கின்றன. அவற்றைப் பார்க்கவோ புரிந்து கொள்ளவோ நம் ஊனக் கண்ணுக்கு வலிமையில்லை. ஆனால் இறைவன் அனைத்தையும் பார்க்கிறான். தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பணம் நம் புண்ணியத்தைக் குடிக்கும், பாவத்தைப் பெருக்கும். குளிப்பது, சுத்தமாயிருப்பது போன்ற ஆசாரங்களை நாம் ரகசிய அறையில் கடைப் பிடித்தாலும் எங்கும் பரந்த இறைவன் அதன் பலனை நம் கைமேல் தருவது போல், யாருக்கும் தெரியாது என்று எண்ணி நாம் ஈட்டும் திருட்டு ஊதியம் நம் ஆன்ம நலனைக் சுருக்குகிறது. பகவான் அதற்குச் சரியான பலன் தந்து விடுகிறான். அதர்ம ஊதியத்துக்கான விளைவுகளை பல்வேறு தர்ம சாஸ்திரங்களில் இருந்து தொகுத்த விதமாகக் கீழ் கண்டபடி அட்டவணையிடலாம்:

1. ஆரோக்யம் குறைகிறது.

2. வீண் மருத்துவச் செலவுகள் நேருகின்றன.

3. இதனால் நியாயமாய் நாம் அனுபவிக்க வேண்டிய உடல் துய்ப்புகள் மிகவும் குறைகின்றன.

4. மனத்தில் நிம்மதியின்மை, பதட்டம், சந்தேகம் மற்றும் தேவையில்லாத அச்சங்கள் ஒருபுறம் இருந்து கொண்டே இருக்கும்.

5. நம்பிக்கை துரோகிகள் நண்பர்களாகச் சேருவர்.

6. துர்புத்தி உள்ள பிள்ளைகள் பிறக்கும்.

7. ஊனமுற்ற எதிர்கால சந்ததி உருவாகும்.

8. மலட்டுத் தன்மை, வம்சம் அற்றுப் போதல் ஆகியவை உண்டாக வாய்ப்பு உண்டு.

9. தேவையில்லாத வழக்கு, வீண் செலவுகள் நிறைய ஏற்படும்.

10. ஆன்மீக ஞானம் குறையும்.

11. பிராத்தனைகள் தாமதமாகப் பலிக்கும் அல்லது பலிப்பதில்லை. ஏனென்றால் இறைவன் விலகிப் போகிறான்.

12. மணம் முடித்துக் கொடுத்த பெண்கள். புகுந்த வீட்டில் கண்ணீர் சிந்துவர்; அவர்கள் வாழ்வு நாசமாகும்.

13. மோட்சம் என்பது பல ஜென்மங்களுக்குத் தள்ளிப் போடப்படும்.

மேற் சொன்னவை அனைத்துமோ அல்லது ஒன்றிரண்டோ – அவரவரின் பாபகனத்தைப் பொறுத்துப் பலிப்பதை இன்றும் நாம் சமூகத்தில் பரவலாகக் காணலாம். இந்தத் தீய விளைவுகளைப் பற்றிய மன உறைப்பு இருந்தாலே போதும், நாடு திருந்திவிடும். சட்டம் சாதிப்பது ஓரளவுதான்; சன்மார்க்கத்துக்குத் தான் பூரண வெற்றி! ஒருவனுடைய ஒரு ரூபாய் நம் கைக்கு வரும் போது அதோடு சேர்ந்து அவனுடைய கர்மாவும் நம்மை வந்து அடைகிறது என்ற பிரக்ஞை நமக்கு இருந்தால் நியாய சம்பாத்தியம் போதும் என்ற திருப்தி நமக்கு ஏற்படும்.

“பொருளில்லார்க்கு இன்று இவ்வுலகு” என்பது உண்மைதான்! ஆனால் பொருள் சேரும் போது அறிவில் இருள் சேர விடலாமா? பாவத்துக்கும் தண்டனைக்கும் துணிந்தவர்கள் எப்படியோ போகட்டும் அவர்களை நாம் திருத்த முடியாது. ஆனால் நாமெல்லாம் வைணவர்கள். முற்பகல் செய்த வினை, பிற்பகல் வந்து நம்மையும் நம் பிள்ளைகளையும் பிடிக்கும் என்று வாசுதேவன் கீதையில் வழங்க, கேட்டிருக்கிறோம் படித்திருக்கிறோம். நாம் அந்த தவற்றினைச் செய்யலாமா? போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.